அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

# ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

# பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. எட்டுத்தொகை நூல்களுள் அகத்திணை பற்றிக் கூறும்நூல்
   1. அகநானூறு
   2. புறநானூறு
   3. பரிபாடல்
   4. பதிற்றுப்பத்து

2. யானை குதிரை தேர் காலாள் ஆகியவை
   1. நாற்படை
   2. நாற்குணம்
   3. நானிலம்
   4. நாற்றிசை

3. தமிழர் பண்பாடு என்பதில் மறைந்துள்ள உருபு
   1. ஐ
   2. கு
   3. அது
   4. இல்

4. ஜலம் என்பதை சலம் என்று தமிழில் பயன்படுத்துவது
   1. தற்சமம்
   2. தற்பவம்
   3. தற்கிழமை
   4. பிறிதின்கிழமை

5. முல்லை மணம் வீசியது. இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. சினையாகுபெயர்
   2. பொருளாகுபெயர்
   3. தொழிலாகுபெயர்
   4. குணவாகுபெயர்

6. தமிழிலக்கியத்தில் உரைநடைப்பாவுக்கு வித்திட்டவர்
   1. சுப்பிரமணிய பாரதியார்
   2. கனகசுப்புரத்தினம்
   3. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை
   4. பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

7. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர்
   1. வீரமாமுனிவர்
   2. கார்டுவெல்
   3. யி.யு.போப்
   4. எல்லிசு

8. ‘உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’ இதில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்
   1. உம்
   2. உறு
   3. ஆம்
   4. மீன்

1 2 3 4

9. காரணப் பெயராக அமைவது
   1. பனை
   2. மரம்
   3. வாழை
   4. மண்வெட்டி

10. செயப்படுபொருள் குன்றிய வினையடி
   1. எடு
   2. பார்
   3. ஓடு
   4. நடி

11. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' இப்பழமொழி உணர்த்தும் பொருள்
   1. அமைதியாக இருப்பவர் செயல் வீரர்.
   2. வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
   3. நன்மை செய்பவர் இடர்களை எதிர்கொள்வர்.
   4. பெருவாழ்வு சிறு தீமையால் கெடும்.

12. சார்பெழுத்து வகையினுள் அடங்குவது
   1. உயிரெழுத்து
   2. ஆய்தவெழுத்து
   3. முதலெழுத்து
   4. மெய்யெழுத்து

13. ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்துவதாகும். இதில் பகைவர் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. வீரர்
   2. நண்பர்
   3. உறவினர்
   4. கேளிர்

14. பால்காட்டும் விகுதி பெறாத சொல்
   1. போயினர்
   2. கலைஞன்
   3. ஆயிழையாள்
   4. நோயாளி

15. குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்து புணர்ந்த சொல்
   1. நாட்டுப்பாடல்
   2. வீட்டுமுற்றம்
   3. பந்தடி
   4. கதவோரம்

16. கருத்து முற்றுப்பெறாது சொற்கள் பொருள்படத் தொடர்ந்து வருவது
   1. சொல்லியம்
   2. எழுவாய்
   3. சொற்றொடர்
   4. செயப்படுபொருள்

**1 2 3 4**

17. சிறந்த வாழ்க்கை முறையும் முதிர்ந்த கல்வியறிவும் கொண்டு சிந்துவெளியில் முதலில் வாழ்ந்தவர்கள்
    1. ஆரியர்
    2. தமிழர்
    3. தெலுங்கர்
    4. சீனர்

18. தமிழ்க் கவிதையிலே கையாளப்படும் யப்பானியக் கவிதை வடிவம்
    1. கைக்கூ
    2. கசடதபற
    3. புதுக்கவிதை
    4. குறும்பா

19. 'நாவலந்தீவு' என அழைக்கப்படுவது
    1. ஈழம்
    2. ஆபிரிக்கா
    3. இந்தியா
    4. மொறீசியசு

20. காலங்காட்டும் இடைநிலைகள் தொக்கு வரும் தொகை
    1. உம்மைத்தொகை
    2. வினைத்தொகை
    3. வேற்றுமைத்தொகை
    4. பண்புத்தொகை

21. 'வாணாள்' என்பதன் பிரிப்பு வடிவம்
    1. வாள் + நாள்
    2. வாழ் + நாள்
    3. வாண் + நாள்
    4. வால் + நாள்

22. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடும் விழா
    1. பவளவிழா
    2. பொன்விழா
    3. வெள்ளிவிழா
    4. வைரவிழா

23. நேற்று மழை பெய்தது. நிலம் காய்ந்து கிடக்கிறது. இச்சொல்லியங்களை இணைக்கும் இணைப்பிடைச்சொல்
    1. ஆகவே
    2. ஏனென்றால்
    3. எனினும்
    4. அதனால்

24. செருமுகம் நோக்கிச் செல்க! இதில் செருமுகம் என்பது
    1. போர்க்களம்
    2. சிந்தை
    3. போர்ப்பறை
    4. படைக்கலம்

25. தமிழில் வெளிவந்த முதற்புதினம்
    1. பிரதாப முதலியார் சரித்திரம்
    2. சுகுணசுந்தரி
    3. துப்பறியும் கோவிந்தன்
    4. தியாகபூமி

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாவலரேறு பெருஞ்சித்திரனாரது தனித்தமிழ்க் கொள்கை யாது?

2. ஐரோப்பியர் வருகையினால் தமிழிலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு எழுதுக.

3. 'மூதின் மகளிர்' என்பதன் பொருளை எழுதுக.

4. தமிழர் அரசியலில் ஆரியரின் ஊடுருவலால் தமிழகம் எவ்வாறு வலுவிழந்தது?

5. டு, று ஆகிய ஈறுகளைப் பெற்றுவரும் நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள் முன் உயிர் புணர்தலுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

6. தன்வினை, பிறவினை ஆகியவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுச் சொல்லியம் எழுதுக.

7. இலக்கிய வகையில் மொழியின் சொற்பாகுபாட்டினை எழுதுக.

(5×2=10 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் பொருளுரையை எழுதுக.**

அது ஒரு கொடும் வெயில் நாள் ஆறுகள் வற்றினவே!
கொதிதணல் எனும் வெயிலின் கொடுமைகள் முற்றினவே!
விதி இதுவென அவர்கள் வீழ்ந்து கிடந்திலரே!
எதுவரை எனினும் அவர்கள் எழுந்து நடந்தனரே!

- எம்.ஏ.நு.்.மான்

(3 புள்ளிகள்)

**3. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மாவீரம்
2. 

(4 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, அதன் மூன்றிலொன்று அளவிற்குச் சுருக்கி எழுதுக.**

முயற்சியுடையவரே முன்னேறுவர். முயற்சியுடையவரே புகழ் பெறுவர்; மதிக்கப்படுவர்; மகிழ்ச்சி அடைவர். ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால் இடைவிடாது முயலுங்கள். இடையிடையே தோன்றும் இன்னல்களைக் கண்டு மருளாதீர்கள். மருண்டவர் தோற்றவரே! கடல் திரண்டு மேல் வரினும் ஏறி நின்று செயல் ஆற்றுங்கள். எண்ணிய செயலில் கண்ணாயிருங்கள். சிறியர் நகை மொழிக்குச் செவி சாய்க்காதீர்கள். வெற்றி கையில் வந்தபோது வேந்தரும் உம்மை விருந்துக்கு அழைப்பர். நம் முன்னோர் எவ்வாறு கல்வியில், வீரத்தில், கடமையில் சிறப்புற்றார்? எண்ணிப்பாருங்கள். கட்டைவண்டியில் செய்த பயணம் காற்றுவேகத்தில் நாற்றிசையும் செல்கிறது. பாலைவனத்தை சோலை வனமாக்கவும் இருந்த இடத்திலிருந்து பெருந்தொலைவிலுள்ள பேச்சைக் கேட்கவும் இன்றைய மாந்தனால் முடிகிறது. இந்த ஆற்றல் எப்படி வந்தது? சோம்பியிருந்து தூங்கி மடியாமல், முழுமனிதனாக முயலுங்கள். விடாது முயலுங்கள். மனிதனுக்குள்ளே மாண்புமிக்க ஆற்றல் உள்ளது. அதை முயற்சியால் வழிப்படுத்தி வெளிப்படுத்த வேண்டும்.

(4 புள்ளிகள்)

**6. பின்வரும் பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

இன்று உலகம் பேரிடர் காலத்தில் சிக்கியுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கிய 'கோவிட் 19' நோய்த்தொற்று பல அலைகளாக மக்களைத் தாக்கி வருகிறது. இதிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு நாட்டின் அரசுகளும் பல்வேறு நடைமுறைகளை மேற்கோண்டுள்ளன. அரசினால் அறிவிக்கப்படும் நோய்த்தொற்றுப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது மக்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். இந்நோய்த் தொற்றினால் ஏற்பட்டுள்ள பொருளாதார, வணிக, உற்பத்திச் சரிவுகளால் உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இவை நீண்ட கால அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டியவையாக உள்ளன.

(4 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் வாழ்வியலில் வீரம்
2. தாயகத்திற்கு நீங்கள் ஆற்ற விரும்பும் பணிகள்
3. மொழிக்கலப்பு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- வெவ்வேறு மொழிகள் தோன்றியமைக்கான காரணங்கள்
- மொழிகள் கலப்பதற்கான காரணங்கள்
- தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்பும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

(15புள்ளிகள்)

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தமிழகத்தைச் சேர சோழ பாண்டியர்களுக்கு உரியதாக கூறுகின்றன. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்ற தொல்காப்பியக் கூற்று இதற்குச் சான்றாகும். மூவேந்தர்கள் எப்போது தோன்றினார்கள் என்று கூறுவது எளிதன்று. அவர்கள் பழைமையான அரச மரபினர் என்று மட்டுமே கூறமுடியும். சேரர், சோழர், பாண்டியர் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். சேரர்களை வானவர், குடவர், பொறையர், மலையர் என்றும் சோழர்களை சென்னி, செம்பியன், வளவன், கிள்ளி என்றும் பாண்டியரை மீனவர், தென்னவர், மாறர், வழுதி என்றும் அழைப்பார்கள். மன்னர்கள் அறத்தை உணர்ந்து செங்கோலராக விளங்கவேண்டுமெனச் சான்றோர் வலியுறுத்தினர். ஈகை மன்னர்களுக்குரிய பெரிய கடமையாக வலியுறுத்தப்பட்டது. பாணர், கூத்தர், விறலியர், புலவர் ஆகியோருக்குப் பெரும் பொருள்களை மன்னர் வாரி வழங்கினர். மக்களுக்கு வேண்டிய நலன்களைச் செய்வதில் கவனம் செலுத்தினர். கலைகளைப் போற்றி வளர்த்தனர். மன்னர்கள் பலர் சிறந்த கல்விமான்களாக விளங்கியுள்ளார்கள். கோப்பெருஞ்சோழன், நெடுஞ்செழியன், இளம்பெருவழுதி, கணைக்கால் இரும்பொறை போன்றோர் பாடிய பாடல்கள் சங்கநூல்களை அணிசெய்கின்றன. மன்னர்கள் சிலர் மானம் அழிய வந்தபோது உயிர்விட்டனர். மக்கள் தன்மேல் வெகுண்டெழுந்தபோது கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்நீத்தார். கரிகாலனுடன் போரிடுகையில் பெருஞ்சேரலாதன் தவறுதலாகப் புறப்புண்பட்டபோதும் வடக்கிருந்து உயிர்விட்டார். கணைக்கால் இரும்பொறை, செங்கணான் சிறைவைத்தபோது பகைவர் தரும் நீரைக் குடிக்க விரும்பாது உயிர்விட்டார். மன்னர்களின் மான உணர்விற்கு இவை சான்றுகளாக அமைகின்றன.

1. பாண்டிய மன்னர்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்? (1 புள்ளி)

___________________________________________

2. மன்னர்கள் கொண்டிருந்த சிறப்பியல்புகள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

3. மன்னர்களின் மான உணர்வுக்குச் சான்றுகள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

4. சங்க நூல்களை அணிசெய்யும் பாடல்களைப் பாடிய மன்னர்கள் யாவர்? (2 புள்ளிகள்)

___________________________________________

5. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்ற தொல்காப்பியக் கூற்று எதற்குச் சான்றாகிறது? (2 புள்ளிகள்)

___________________________________________

(9 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் பந்திகளுக்குப் பொருத்தமான தலைப்புகளைத் தெரிவுசெய்து எழுதுக.**

**தலைப்புகள்:**

- உலகநாடுகள் பலவற்றின் முதுகெலும்பு
- நடமாடும் நூலகம்
- புகைப்படக் கண்காட்சி

1. ______________________________________

ஈழம் போன்று வளரும் நாடுகளுக்கு மிகப்பெரும் பலமாக இருப்பது சுற்றுலாத்துறை ஆகும். அதிகளவு பாலைவனத்தைக் கொண்டுள்ள துபாய் சுற்றுலாவில் அதிக வருவாயை ஈட்டி வருகிறது. சின்னஞ்சிறிய நாடான சிங்கப்பூர் எந்தவிதமான பெரிய வளமும் இல்லாமல் சுற்றுலாவில் உலக நாடுகளுக்குச் சவால் விடும் வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. சில நாடுகளில் சுற்றுலாத்துறையை நம்பித்தான் நாட்டின் பொருளாதாரமே இருக்கிறது. பல உலக நாடுகளின் முக்கிய தொழிற்றுறையாக இன்றளவும் சுற்றுலாத்துறையே இருந்து வருகிறது.

2. ______________________________________

உலகம் முழுவதும் உள்ள வாசிப்பாளர்களுக்கென்றே அமசோன் நிறுவனம் தயாரித்துள்ள ஒரு பிரத்தியேக கருவிதான் கிண்டல். கிண்டல் தளத்திற்கு நீங்கள் சென்றால் இலவசமாகவும் பணம் செலுத்தியும் ஆயிரக்கணக்கான மின் நூல்களைத் தரவிறக்கம் செய்து வாசிக்கலாம். பார்ப்பதற்கு ஒரு பலகைக்கணினி போல இருந்தாலும் பத்து மடங்கு எடைகுறைவானது. அதாவது 180 கிராம் மட்டுமே. இதனை 4 யி வசதியுடன் வாங்கும்போது உலகில் எங்கு சென்றாலும் இணைய வசதியுடன் விரும்பிய நூலைத் தரவிறக்கம் செய்து வாசிக்கலாம்.

3. ______________________________________

இரசியாவில் உள்ள உறைந்த கடலுக்கு அடியில் அழியும் தாவரம் மற்றும் விலங்குகளின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இரசியாவின் வடமேற்கில் உள்ள கரிலியா பகுதி கடுங்குளிரில் உறைந்து காணப்படுகிறது. பனிப்பிரதேசம் போன்று கடல்நீர் உறைந்து இருப்பதால், இப்பகுதி சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது. இந்நிலையில் உறைந்த கடற்பரப்புக்கு அடியில் உள்ள நீரில் புகைப்படங்கள் மற்றும் அழகிய சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. புகைப்படக் கலைஞர் விக்டர் இக்கண்காட்சியை நிகழ்த்தினார்.

(3×2=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 03 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |